கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.74/2023** தேதி:**17.07.2025**

வாதி தரப்பு சாட்சி -1 (கிஷோர், த/பெ.நரசிம்மலு) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**5** முதல் **7** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை **:**

1. எனக்கு வேறு பெயர் உண்டா என்றால் 2005 க்கு முன்பாக எனது பெயர் கிருஷ்ணசாமி அதன்பிறகு நான் எனது பெயரை கிஷோர் என்று மாற்றிக்கொண்டேன். நான் சங்கத்தின் சேரும்போது கிருஷ்ணசாமி என்ற பெயரில் தான் சேர்ந்தேன். 2006 ல் பெயர் மாற்றிப்பின் அதற்கான ஆவணங்களை சங்கத்தின் முன் கொடுத்தேன். இந்த அசல் வழக்கில் நான் எனது உண்மை பெயரான கிருஷ்ணசாமி என்ற பெயரை சொல்ல வில்லை என்றால் சரிதான். அதனை எனது வாதுரையில் வேண்டும் என்று மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

2. கிருஷ்ணசாமி என்ற பெயரில் உறுப்பினராக இருந்த விவரத்தை நீதிமன்றத்தில் கூறவில்லை என்றால் சரிதான். எனது பிரமான வாக்கு மூலத்தில் நான் என்ன படித்துள்ளேன் என்றும் எனது தொழில் என்ன என்றும் கூறவில்லை என்றால் சரிதான். நான் கடலூரில் மின்சார சாதனங்கான கடை வைத்துள்ளேன். நான் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது வாதுரையில் சங்கத்தின் பதிவு எண்.38/1982 என்றும் எனது பிரமான வாக்குமூலத்தில் 38/1992 என்று கூறிவுள்ளேன் என்றால் அது தவறுதலாக அச்சிடப்பட்டிருக்கும். சரியான எண் 38/1982 ஆகும். 38/1992 என்பது சங்கத்தின் எண் இல்லை என்றால் சரிதான். சங்கம் எனக்கு எப்படி அறிமுகம் ஆனது என்றால் முதலில் எனது தகப்பனார் உறுப்பினராக இருந்தார் அதன் பின்பு நானும் உறுப்பினரானேன்.எனது வாதுரையில் 2 வது பத்தியில் எனது குடும்ப உறுப்பினர்களின் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவர்களது பெயர் என்ன என்றால் எனது தகப்பனாரான K.நரசிம்மலு மட்டுமே.

3. எனது தந்தையின் சங்க உறுப்பினர் எண் எனக்கு தெரியாது. எனது சங்க உறுப்பினர் எண்ணினை நிருபிக்க ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. சங்கத்தின் உறுப்பினர் அட்டையை புதுப்பித்தேனா என்றால் உறுப்பினர் அட்டை என்று ஒன்று கிடையாது. நான் வழக்கறிஞர் அறிவிப்பு கோயிலுக்கு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். நாயுடு சங்கம் எந்த அதிகாரத்தின் கீழ் இயங்கி வருகிறது என்றால் தலைவருக்கு கீழாக இயங்கி வருகிறது. இந்த சங்கத்தின் உறுப்பினர்கள் தலைவருக்கும் செயலாளர் எடுக்கும் முடிவுகளுக்கும் உட்பட்டுதான் நடக்க வேண்டும் என்றால் சரிதான்.

4. மேற்சொன்ன விதி எனக்கும் பொருந்தும் என்றால் சரிதான். சங்கம் பொதுக்குழு எடுக்கும் முடிவை தனி நபர் எதிர்த்து நிற்க முடியாது என்றால் சரிதான். நான் சங்கத்திற்கு எப்போது எல்லாம் போய்வருவேன் என்றால் அழைப்பு வரும்போது எல்லாம் போய்வருவேன். சங்கத்தின் அலுவலக நேரம் 10 முதல் 1 ஆகும். நான் இந்த வழக்கில் முதல் பிரதிவாதியாக யாரை சேர்த்துள்ளேன் என்றால் நாயுடு சங்கத்தின் தலைவரை மற்றும் செயலாளரையும் சேர்த்துள்ளேன். வழக்கில் ஏன் ஆணையரை சேர்த்துள்ளீர்கள் என்றால் அவர்கள் தான் அறங்காலரை நியமிக்கும் பொறுப்பில் உள்ளனர் எனவே அவர்களை தரப்பினராக சேர்த்தேன். சங்கத்திற்கும் எனக்கும்

5. கருத்து வேறுபாடு இல்லை என்றால் சரிதான். அப்போது எதற்காக வழக்கு தாக்கல் செய்தீர்கள் என்றால் பலீஜா நாயுடு சமூகத்தில் உள்ளவர்களை மட்டுமே அறங்காலராக நியமிக்க முடியும் என்று சட்டத்தில் உள்ளது அதனை செயல்படுத்தவே இவ்வழக்கு தாக்கல் செய்தேன். எனது வாதுரையில் 3ம் பத்தியில் மயிலாடுதுரை துணைஆணையர் 12.04.1987 தேதியிட்ட ஆணை பிறப்பித்தார் என்று குறிப்பிட்டுள்ளீர்கள் அது எப்படி தெரியும் என்றால் எனது தந்தையார் இரு முறை அறங்காவலராக இருந்தார் அதனால் தெரியும்.அந்த ஆணையினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். ( நீதிமன்ற கோப்பில் இல்லை)

6. அந்த உத்தரவில் கவுரா நாயுடு நபர்களை நியமிக்க கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. கவுரா நாயுடு நபர்களும் நாயுடு சமூகத்தினர் தான் என்றால் சரிதான். சங்கம் ஆரம்பிக்கப்பட்ட நோக்கமே நாயுடு சமூகத்தினரை மேம்படுத்த வேண்டும் என்றது தான் என்றால் சரிதான். சங்கத்தின் முன்னேற்றத்திற்கு நாயுடு சமூகத்தினர் அனைவரும் பங்கு உள்ளது என்றால் சரிதான்.சங்கத்தின் நிறுவனத்தலைவர் பெயர் L.K. கோவிந்தராஜ் ஆகும்.

7. சங்கங்கள் பற்றியும் சங்கத்தின் சட்டத்தினைப்பற்றியும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் உறுப்பினராக இருக்கும் இந்த சங்கம் எந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. சங்கங்களின் சட்டத்தின் படி ( Societies Act ) சங்கத்தில் தவறு ஏதேனும் ஏற்பட்டால் பதிவாளர் தான் மனு கொடுக்கப்பட வேண்டும் என்றால் சரிதான். நான் பதிவாளருக்கு மனு கொடுத்துள்ளேன். நான் கொடுத்த மனுவின் மீது பதிவாளர் எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை என்றாலும் அது முறையாக நடைபெறுவதால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. அங்கு நடவடிக்கை ஏதும் எடுக்கப்படாததால் தான் நீதிமன்றத்தை அனுகினேன். நான் பதிவாளர் முன்பாக தாக்கல் செய்த மனுவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் பதிவாளரிடம் கொடுத்த மனுவினை பற்றியோ அதில் நடவடிக்கை எடுக்காத விவரத்தை பற்றியோ எனது வாதுரையிலும் பிரமான வாக்குமூலத்திலும் கூறியுள்ளேனா என்றால் எனக்கு நியாபகம் இல்லை.

8. நான் உண்மையாவே மனு கொடுத்திருந்தால் பதிவாளரை ஒரு தரப்பினராக சேர்த்திருப்பேன் என்றாலும் கொடுக்காததால் தான் சேர்க்கவில்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் தான் அறங்காவலரை நியமிக்கும் பொறுப்பில் உள்ளனர். நான் பலீஜா சமூகத்தை சார்ந்தவர் என்பதை குறிக்க நீதிமன்றத்தில் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் எனது சமூகத்திற்கு சாதகமாக வழக்கு தாக்கல்

செய்துள்ளேன் என்பது எனது சாதிசான்றிதழை தாக்கல் செய்தால் தெரிந்துவிடும் என்பதால் அதனை தாக்கல் செய்ய வில்லை என்றால் சரியல்ல. நானும் எனது அப்பாவும் பலீஜா சமூகத்தை சார்ந்தவர்கள் என்பதையும் எனது அப்பா அறங்காவலராக இருந்ததை எனது வழக்கில் கூறவில்லை என்றால் சரிதான்.

9. சங்கத்தில் எப்போது புதிய சட்ட விதிமுறைகளை நடைமுறைக்கு கொண்டுவந்தனர் என்றால் 2016 ல் கொண்டுவந்தனர். சங்கத்தில் அப்போது நான் உறுப்பினராக இருந்தேனா என்றால் இருந்தேன். அப்போது சங்கத்தில் திருத்தக்குழு தலைவராக யார் இருந்தார் என்றால் எனக்கு நியாபகம் இல்லை. இந்த புதிய சட்ட விதிகள் கொண்டுவந்ததற்கான காரணம் மற்றும் நோக்கம் தெரியுமா என்றால் அது பலீஜா சமூகத்திற்காக கொண்டுவரப்பட்டது. அதில் உறுப்பினர்கள் அனைவருக்கும் சந்தா தொகை அதிகமாக்கப்பட்டது. சங்கத்தில் அறங்காவலர் நியமிப்பதை எந்த ஆண்டு நிறுத்தினார்கள் என்றால் 18 ஆண்டுகள் இருக்கும் சரியாக ஆண்டு நியாபகம் இல்லை. ஒரு வழக்கு நிலுவையில் இருந்தது அது முடிந்த பிறகு நியமணம் செய்தார்கள். நியமணம் நிறுத்தப்பட்ட பிறகு சங்கத்தின்மூலமாக நியமணம் செய்ய வேண்டி என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் வழக்கு முடிந்த பிறகு உர்ச்சவம் மற்றும் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது . சங்க உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து இணை ஆணையரை சந்தித்து நியமணத்திற்காக கலந்துரையாடினோம் பின்னர் தான் அறங்காவலர் நியமிக்கப்பட்டார். வேறு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் வேறு என்ன எடுக்கப்ட்டது என்று எனக்கு தெரியாது. 2016 புதிய சட்டவிதிகளை நான் படித்துள்ளேனா என்றால் படித்துள்ளேன்.

10. என்னிடம் காண்பிக்கப்படும் வா.த.சா.ஆ.1 ல் 2 வது பத்தியான சங்கத்தின் நோக்கம் என்ற தலைப்பில் கீழ் கூறியுள்ள வாறு உள்ளது என்றால் சரிதான். (அதில் கூறப்பட்டுள்ள விதிமுறையாவன:

அ. நாயுடு சமூகத்ததினரிடையே ஒற்றுமை மற்றும் வளர்ச்சிக்கு பாடுபடுதல்.

ஆ. சாயுடு சமூகத்தின் மத இன கலாச்சாரங்களை பாதுகாக்க பாடுபடுதல் மத நல்லிணக்கத்தை மேம்படுத்துதல்.

இ. நாயுடு சமூகத்தினரிடம் நலிந்த மாணவ , மாணவிகளின் கல்லி வளர்ச்சிக்கு உதவி புரிதல்.

ஈ. நாயுடு சமூகத்தினரின் நலிந்த இளைய தலைமுறைகளின் திருமணத்திற்கு வேண்டுவன செய்தல்.

11. சட்ட நோக்கங்களில் எந்த சமூகம் என்று குறிப்பிடவில்லை என்றாலும் பொதுவாக நாயுடு சமூகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். சங்க நோக்கங்களின் படி அனைத்து நாயுடு உட்பிரிவுக்கும் அது பொறுந்தும் என்றால் சரிதான். சங்கத்தில் தேர்தல் நடக்குமா என்றால் நடக்கும் . நான் ஒரு முறை தேர்தலில் வாக்கு அளித்து உள்ளேன் . எப்போது என்று எனக்கு தெரியவில்லை. அப்போது யார் வெற்றி பெற்றார் என்றால் ராகவேந்தன் என்பவர் வெற்றி பெற்றார். எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடத்துவர் என்றால் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும். சங்கத்தில் புதிய நிர்வாகிகளை தேர்ந்தெடுப்பதற்கான தகுதி தெரியுமா என்றால் பலீஜா சமூகத்தினராக இருக்க வேண்டும். தலைவருக்கும் அதே தகுதி தான் .

12. சங்கத்திற்காக என்ன என்ன சமூதாய பணிகள் செய்தேன் என்றால் கட்டிடம் கட்டும் போது நன்கொடை அளித்துள்ளேன். நாயுடு சமூகத்தில் கூட்டங்கள் எப்போது ஆரம்பித்து எப்போது முடியும் என்றால் ஏப்ரலில் ஆரம்பித்து மார்ச்சில் முடியும் இடையில் இரண்டு பொது குழு கூட்டம் நடத்தப்படும். நாயுடு சங்கத்தின் சிறப்பு பொது குழு கூட்டத்தில் நான்கலந்துள்ளேனா என்றால் கலந்துள்ளேன். எதற்காக அது கூட்டப்பட்டது என்றால் சங்க கட்டிடம் கட்டுவதற்காக கூட்டப்பட்டது.

13. நாயுடு சங்கத்தில் உறுப்பினர்களை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்றால்

எந்த விதிமுறையின் கீழ் நிறைவேற்றப்படும் என்றால் எனக்கு தெரியாது. சங்கத்தில் தற்போதைய தலைவர் மற்றும் செயலாளர் பெயர் என்ன என்றால் கமலநாதன் மற்றும் பராங்குசம் ஆகும்.இவர்கள் எத்தனை ஆண்டுகளா இந்த பதவியில் உள்ளனர் என்றால் எனக்கு தெரிந்து 4 வருடங்கள் இருக்கும். தலைவர் மற்றும் செயலாளரின் செயல்பாடுகள் திருப்பித்திகரமாக இருந்ததால் உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து இரண்டாம் முறை இவர்களை பணி அமர்த்தினர் என்றால் சரிதான். சங்கங்களின் பதிவு சட்டப்படி பொது குழு கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவானது ஒரு சிலரின் எதிர்ப்புகள் இருந்தாலும் அதுவே நிறைவேற்றப்படும் என்றால் சரிதான். தற்போது கவுரா சமூகத்தை சேர்ந்தவர்கள் அறங்காவலராக இருக்கிறார்களா என்றால் இருக்கிறார்கள் அதனை எதிர்த்துத்தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் அறங்காவலராக பலீஜா சமூகத்தை சார்ந்தவர்களும் இருக்கிறார்களா என்றால் நான் தான் இருக்கிறேன்.

14. அறங்காவலர் குழுவில் இருக்கும் என்னை நாயுடு சமூகம் தான் சிபாரிசு செய்து நியமிக்கப்பட்டேன் என்றால் சரியல்ல. என்னுடைய தன்னிச்சையான மனு அனுமதிக்கப்பட்டு நான் நியமிக்கப்பட்டேன். தன்னிச்சையான மனுவின் மூலம் நியமணம் செய்யப்பட்டிருந்தால் அந்த நியமணம் தவறானது என்றால் சரியல்ல. 1987 ம் ஆண்டு உத்தரவின் படி அறங்காவலர் குழுவில் உள்ள நாயுடு சங்கத்தினரை மட்டுமே நியமணம் செய்ய முடியும் என்றால் சரியல்ல.அது திருப்பாபுலியூர் நாயுடு சங்கம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.நான் கூறுவது கடலூர் நாயுடு சங்கம் ஆகும் அதற்கு இது பொறுந்தாது.

15. கடலூர் நாயுடு சங்கம் என்றாலும் திருப்பாபுலியூர் நாயுடு சங்கம் என்றாலும் இருவரும் வரதராஜபெருமாள் கோயிலுக்கு தான் செல்லுகிறீர்கள் என்றால் சரிதான். எனது சங்கத்தில் கவுரா சமூகத்தினரை அறங்காவலராக நியமிக்க கூடாது என்று ஏதேனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நாயுடு சங்கத்தில் பலீஜா மற்றும் கவுரா

என இரு உட் பிரிவுகள் இருக்கிறதா என்றால் இவர்களும் சேர்த்து சுமார் 5 ,6 உட்பிரிவுகள் இருக்கும். நான் பலீஜா சமூகத்தினர் என்பதினால் காழ்புணர்ச்சி கொண்டு கவுரா சமூகத்தினரை சங்கத்து சேவையில் ஈடுபடக்கூடாது என்று கூறினால் சரியல்ல. நாயுடு சங்கத்தை நிர்வகிப்பது மற்றும் ரத்து செய்வது தொடர்பான அதிகாரம் யாரிடம் உள்ளது என்றால் பொதுக்குழுவின் முடிவின் பெயரில் தலைவர் நிர்வகிப்பார். சங்க சட்ட விதிகள் படி தனிப்பட்ட நபர்கள் செயல்பட அதிகாரம் கிடையாது என்றால் சரிதான். சங்த்தின் மீதான காழ்புணர்ச்சியினால் ஆனேகர் சங்கத்தின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றாலும் அதனை எல்லாம் சங்கம் ஜெயித்துள்ளது எனற் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணம் அசல் வழக்கு எண் **33/2008** ல் உள்ள தீப்புரைதான் என்றால் சரிதான். இது பி.த.சா.ஆ.**1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.** என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்முறையீடு வழக்கு எண் **25/2013** ம் தீர்ப்புரைதான் என்றால் சரிதான்.இது பி.த.சா.ஆ.**2** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.**

16. சங்கத்தின் வளர்ச்சி மற்றும் முன்னேற்த்தை தடுப்பதற்காக பிறரின் தூண்டுதலின் பெயரில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டடுடள்ளது என்றால் சரியல்ல. ரிட் மனு WP. No. 22583/2013 ஆனது 23.08.2017 தேதியிட்ட ஆணையின் மூலம் அதில் சங்கம் நியமிக்கும் நபர்களை உறுத்துகட்டளையின் மூலம் அறங்காவலராக நியமிக்க உத்தரவு இட்டது என்றால் எனக்கு தெரியாது. அவர்கள் 2023 ல் தான் நியமிக்கப்பட்டார்கள்.

17. என்து பிரதான வாக்குமூலத்தில் 5ம் பத்தியில் கூறியுள்ளது தவறானது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கதனது இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிராகவும் பொது சங்கத்திற்கும் எதிராக உள்ளது என்றால் சரியல்ல. எனது தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியின் காரணமாக பொய்யான வாக்குமூலத்தின் மூலம் சங்கத்திற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஆவணங்கள் பி.த.சா.ஆ.**1** மற்றும் பி.த.சா.ஆ.**2** குறியீடுசெய்யப்பட்டுள்ளது**.**
குறுக்கு விசாரணை முற்றிற்று.